இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

விழுவது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 8.10.2026

படிவம் 6 - தான் காரணம்!

தேர்தல் ஆணையம் பயன்படுத்தும் படிவம் - 6இல் செய்துள்ள திருத்தத்தை நாங்கள் அங்கீகரிக்கவில்லை என்று உச்சநீதிமன்றம் இப்போது சொல்லி இருக்கிறது. இப்போது சொல்லி என்ன பயன்? சதிகரமான தேர்தல்கள் தான் நடந்து முடிந்து விட்டனவே!

தேர்தல்களில் தான் பிரச்சினைகள் வரும் என்றால் இந்தியாவைப் பொறுத்தவரையில் தேர்தல் ஆணையர்களே பிரச்சினைக்கு உரியவர்கள் ஆனார்கள். அதிலும் தலைமைத் தேர்தல் அதிகாரியாக ஞானேஷ்குமார் நியமிக்கப்பட்டது முதல் அவரைச் சுற்றியும், அவரால் உருவாக்கப்படும் பிரச்சினைகள் தான் அதிகம். தலைமைத் தேர்தல் அதிகாரி ஞானேஷ் குமாருக்கு நாங்கள் சொன்ன ஆலோசனைகள் எதையும் அவர் கேட்காமல் தன்னிச்சையாக நடந்து கொண்டார் என்று மற்ற இரு தேர்தல் ஆணையர்களும் சொல்ல விவகாரம் இப்போது இந்தியா முழுவதும் வெடித்துள்ளது.

இதை வைத்து ஞானேஷ்குமாருக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் சைலேந்திர மணி திரிபாதி என்பவர் பொதுநல வழக்குத் தாக்கல் செய்துள்ளார். "இரண்டு தேர்தல் ஆணையர்களின் எதிர்ப்பை மீறி தலைமைத் தேர்தல் ஆணையர் நடந்து கொண்டுள்ளார். இதில் மிக முக்கியமானது படிவம் 6 பிரச்சினை ஆகும். படிவம் 6 இரண்டு ஆணையர்களின் எதிர்ப்பை மீறி திருத்தப் பட்டுள்ளது. சட்டத் திருத்தம் செய்து திருத்த வேண்டியதை தன்னிச்சையாக இணையத்தில் திருத்தி இருக்கிறார்கள். பெற்றோர் விபரங்கள் கேட்கப்பட்டுள்ளன. முந்தைய திருத்தம் தொடர்பான நிபந்தனைகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இரண்டு தேர்தல் ஆணையர்கள் ஒப்புதல் இல்லாமல் ஞானேஷ்குமார் இதைச் செய்துள்ளார். இவை அனைத்தும் சட்ட விரோதமானது. எனவே ஞானேஷ்குமார் மீது குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. இதே போல் பாட்னாவைச் சேர்ந்த ராகேஷ் குமார் சிங் என்பவரும் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த இரு வழக்குகளும் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதிகள் ஜோய்மால்யா பாக்சி, மோகனா அமர்வில் விசாரணைக்கு வந்தது. விசாரணையின் போது நீதிபதிகள் சொன்ன ஒரு கருத்து அதிர்ச்சிக்குரியதாக இருக்கிறது.

"தேர்தல் ஆணையம் பயன்படுத்தும் படிவம் 6 இல் செய்யப்பட்டுள்ள எந்த மாற்றத்தையும் நாங்கள் அங்கீகரிக்க வில்லை. இதை இந்த நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது. இது குறித்து தேர்தல் ஆணையம் விளக்கம் அளிக்க வேண்டும். அவர்கள் விளக்கம் அளித்த பிறகு, அதை மாற்றியது யார் என்பதைக் கண்டுபிடிப்போம்" என்று நீதிபதிகள் சொல்லி இருக்கிறார்கள்.

SIR நடைமுறையின் கீழ் வாக்காளர் பட்டியலில் இணைய வழியில் பெயர் சேர்க்கும் புதிய வாக்காளர்கள் தங்களது பெற்றோரின் SIR தகவல்களையும் சேர்க்க வேண்டும் என்று விதி சேர்க்கப்பட்டது. 2025 ஜூலை மாதம் இந்த திருத்தம் செய்யப்பட்டது. இந்த தகவல்களைப் பெறுவது சாதாரணமான விஷயம் அல்ல. அனைவருக்கும் இந்த தகவல்கள் கிடைக்காது. இந்த தகவலைச் சேர்க்க முடியாமல் போனதால் தான் கொத்துக்கொத்தாக பலரது பெயர்களை சேர்க்க முடியாமல் போனது. இந்த திருத்தம் கூடாது என்று தான் தேர்தல் ஆணையர்களான விவேக் ஜோஷி, சுக்பீர் சிங் சாந்து ஆகிய இருவரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள். ஆனால் அதை தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மதிக்கவில்லை.

20 மாநிலங்களில் SIR பணிகள் நடந்துள்ளன. இதுவரை 13 கோடி பேர் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் மீண்டும் கேள்விக்குரியதாக ஆகிறது. SIR நடவடிக்கைகளுக்குப் பிறகு நாடாளுமன்றத் தேர்தல் நடந்துள்ளது. தமிழ்நாடு உள்ளிட்ட பல மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தலும் நடந்துள்ளது. இந்த முடிவுகளும் நியாயமான, மக்கள் முடிவுகள் தானா என்பதும் கேள்விக்குரியது ஆகும்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் எத்தகைய மோசடியைச் செய்துள்ளார் என்பது இதன்மூலம் தெரிய வந்துள்ளது. எதைக் கேட்டாலும், 'உச்சநீதிமன்றமே சொல்லி விட்டது, அங்கீகரித்து விட்டது' என்று சொல்லி வந்தார் ஞானேஷ்குமார். ஆனால், 'படிவம் 6 திருத்தத்தை அங்கீகரிக்க வில்லை' என்று உச்சநீதிமன்றமே சொல்லி விட்டது.

படிவம் 6 இல் செய்யப்பட்ட திருத்தத்தை உச்சநீதிமன்றம் அங்கீகரித்துள்ளதாக கடந்த மாதம் செப்டம்பர் 26 ஆம் தேதி அன்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. "வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிக்கான படிவம் 6 இல் இணைக்கப்பட்ட உறுதிமொழி உச்சநீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

SIR இல்லாத காலங்களில் வாக்காளர் பதிவு விதிகள் 1960 இன் படி பழைய படிவங்களே பயன்படுத்தப்படும்" என்று செப்டம்பர் 6 அன்று தேர்தல் ஆணையம் சொல்லி இருக்கிறது. அப்படியானால் திட்டமிட்டு தேர்தல் ஆணையம் பொய் சொல்லி இருக்கிறது.

"ஆன்லைன் படிவம் 6 இல் சட்டவிரோத மாற்றத்தைச் செய்ய டி.சி.எஸ். நிறுவனத்துக்கு தேர்தல் ஆணையத்தில் யார் உத்தரவிட்டது? அவர்கள் அவ்வாறு செய்ய அழுத்தம் கொடுக்கப்பட்டதா?" என்று காங்கிரஸ் தலைவர் ராகுல்காந்தி எழுப்பி உள்ள கேள்வியும் மிகமிக முக்கியமானது. உச்ச நீதிமன்றம் இதையும் விசாரிக்க வேண்டும்.

திட்டமிட்டு ஞானேஷ்குமார் படிவம் 6-ஐ சட்டவிரோதமாக மாற்றி இருக்கிறார். தேர்தலையே குற்றச்சம்பவமாக மாற்றி இருக்கிறார் ஞானேஷ்குமார். இதை விட சட்டவிரோதம் இருக்க முடியாது. எந்தவித மிகப்பெரிய தண்டனைக்கும் அவர் பொருத்தமானவரே ஆவார். உச்சநீதிமன்றத்திடம் இருந்து மக்கள் எதிர்பார்ப்பதும் அதுதான்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க உச்சநீதிமன்றம் மறுத்து விட்டாலும், அவர் இதுவரை பிறப்பித்த அனைத்து உத்தரவுகளும் ஆய்வு செய்யப்படும் என்று சொல்லி இருக்கிறது. சட்டத்தின் அடிப்படையில் எடுக்கப்படாத முடிவுகளை ரத்து செய்வோம் என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் சொல்லி இருப்பது வரவேற்கத்தக்கது.

தேர்தல் ஆணையத்தின் தவறான முடிவுகளால் நடத்தப்பட்ட தேர்தல் முடிவுகளை என்ன செய்யப் போகிறீர்கள் என்பது தான் மிகமிக முக்கியமான கேள்வி ஆகும். தவறான முடிவுகளால் தவறான மனிதர்கள் ஆட்சியைக் கைப்பற்றி இருப்பதற்கும் முடிவு கட்டியாக வேண்டும்.

ஒரு ஞானேஷ்குமார் மீது நடவடிக்கை எடுப்பதால் மட்டும் இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது. வைத்து விடக் கூடாது. ஞானேஷ் குமார் எடுத்த நடவடிக்கைகளின் விளைவுகளையும் விசாரணை செய்தாக வேண்டும்.

●●





அண்ணாநகர் தெற்கு பகுதி கழகச் செயலாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவருமான ந. இராமலிங்கம் அவர்களின் 80வது பிறந்தநாள் விழா, கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஏற்பாட்டில் அண்ணா நகரில் அமைந்துள்ள அம்மா அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துகளுடன், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி, தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.கே.மோகன், ப.தாயகம் கவி மற்றும் மாநகராட்சி மேயர் பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், அண்ணாநகர் வடக்குப் பகுதிச் செயலாளர் ச.பரமசிவம் உள்ளிட்ட முன்னாள் இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு ந. இராமலிங்கம் அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். மேலும், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஜி.எஸ்.டி. வசூல் தொடர்ந்து சரிவு!

த.வெ.க. அரசு மார்தட்டிக்கொள்வது அபத்தமானது!

கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

சென்னை, அக்.8- தி.மு.க. துணைப்பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் ஜி.எஸ்.டி. மூலம் மாநிலங்களுக்கு ஏற்படும் நிதியிழப்பை தொடர்ந்து சுட்டிக் காட்டி, அதற்கு எதிராகக் குரல் கொடுத்து வருகிறது தி.மு.க. ஆனால், கடந்த மூன்று மாதங்களாக தமிழ்நாட்டின் மொத்த ஜி.எஸ்.டி. வசூல் தொடர்ந்து



சரிந்து வருகிறது. செப்டம்பர் மாதத்தில் மட்டும் 5% குறைந்துள்ளது. விண்ணை முட்டும் விலைவாசி உயர்வால் அன்றாடத் தேவைகளுக்குக்கூட செலவழிக்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

வாங்கும் சக்தி குறைந்து, மக்களின் நுகர்வு குறைவதன் தாக்கம்தான் தமிழ்நாட்டின் ஜி.எஸ்.டி. வசூல் சரிவிலும் வெளிப்படுகிறது. நாடு முழுவதும் சில பொருட்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ஜி.எஸ்.டி. வரிக் குறைப்பை தன்னுடைய சாதனையாக த.வெ.க. அரசு மார்தட்டிக்கொள்வது அபத்தமானது. தமிழ்நாட்டில் தொடர்ந்து உயர்ந்து வரும் விலைவாசியை கட்டுப்படுத்த இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?.

இவ்வாறு கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. தனது எக்ஸ் தளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தாராபுரம் த.வெ.க. வேட்பாளர் ரூ.40 லட்சத்துக்கு மேல் செலவு செய்தாரா?

சத்தியபாமா மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்!

தேர்தல் அதிகாரியிடம் தி.மு.க. துணை அமைப்புச் செயலாளர் எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., புகார் மனு!

சென்னை, அக்.8- தாராபுரம் தவெக வேட்பாளர் ரூ.40 லட்சத்துக்கு மேல் செலவு செய்தது உறுதி செய்யப்பட்டால், சத்தியபாமா மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தி.மு.க. சார்பில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரியிடம் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை தலைமை செயலகத்தில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரியை திமுக துணை அமைப்பு செயலாளரும் எம்எல்ஏவுமான ஆஸ்டின் நேற்று முன்தினம் சந்தித்து புகார் மனு அளித்தார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

தாராபுரம் தொகுதி த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமா வீடியோவில் பேசியதை எல்லாரும் பார்த்திருப்பீர்கள். இந்த தேர்தல் பிரசாரத்திற்காக வந்த அமைச்சர்களுக்காகவும், கட்சி முக்கியஸ்தர்களுக்காகவும் தங்கும் அறையை மல்லி ரிசார்ட் என்ற ஒரு ஓட்டலில் ஒதுக்க கிட்டத்தட்ட ரூ.16 லட்சம் செலவு செய்திருக்கிறேன் என்று கூறியுள்ளார். அதே போல மேலும் பல தொகைகளை செலவு செய்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார். இன்றைக்கு அறை ஒதுக்கீடு செய்ய மட்டும் ரூ.14 லட்சம் செலவு செய்திருக்கின்றேன் என வேட்பாளர் சத்தியபாமா கூறி உள்ளார்.

எனவே, இன்றைக்கு தலைமை தேர்தல் அதிகாரியை நேரடியாக சந்தித்து, ஒரு புகார் மனு கொடுத்திருக்கிறோம். இது மாதிரி வேட்பாளர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் போல இன்றைக்கு வீடியோவில் தன்னுடைய வாக்குமூலத்தை வெளியிட்டிருக்கின்றார். எனவே, உடனடியாக நீங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை, தேர்தல் அப்சர்வர், தேர்தல் ஆபீசர், மாவட்ட தேர்தல் அதிகாரி இவர்களை எல்லாம் உடனடியாக நீங்கள் தொடர்பு கொண்டு, இந்த ரூ.14 லட்சம் கணக்கில் காட்டப்பட்டிருக்கின்றதா,

அந்தப் பதிவேட்டில் அவர்கள் பதிவு செய்து, வேட்பாளரும் அவருடைய முகவரும் கையெழுத்து போட்டிருக்கின்றார்களா என்பதை உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கின்றோம். அது மட்டுமல்லாமல், வங்கி மூலமாக வங்கியினுடைய ஸ்டேட்மெண்ட் எடுத்து, அந்த வங்கியில்



இந்த ரூ.14 லட்சத்துக்கான பணம் டிரான்ஸ்பர் பண்ணப்பட்டிருக்கின்றதா, யாருக்காவது காசோலையாக கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை வெரிபை பண்ண வேண்டும் என்று சொல்லியிருக்கின்றோம்.

இந்த இரண்டுமே செய்யவில்லை என்று சொன்னாலும், வங்கி கணக்கிலும் அது வரவில்லை என்று சொன்னாலும், தேர்தல் கணக்கான அந்த பதிவேட்டிலே பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னாலும், உடனடியாக அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லி இருக்கின்றோம். தேர்தல் விதிமுறைப்படி ஒரு வேட்பாளர் ரூ.40 லட்சத்துக்கு மேல் செலவு செய்தார் என்று சொன்னால், அவர் தகுதி நீக்கம் செய்யப்பட வேண்டும்

3 ஆண்டுகளுக்கு அவர் தேர்தலில் போட்டியிட முடியாது. அதிக பட்சமாக ஆறு மாத காலம் சிறைத் தண்டனையும் வழங்கப்பட வேண்டும் என்பதுதான் தேர்தல் விதி. எனவே, ரூ.14 லட்சம் செலவு செய்தேன் என்று வாக்குமூலமாக கொடுத்திருப்பதை நீங்கள் உடனடியாக ஆய்வு செய்து, அது பட்டியலில் சேர்க்கப்படாமலோ, வங்கி கணக்கில் பரிமாற்றம் இல்லாமலோ இருக்கும் என்று சொன்னால், உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தேர்தல் அதிகாரியை சந்தித்து தி.மு.க. சார்பில் மனு கொடுத்திருக்கின்றோம்.

அந்த வீடியோவில் அவர் பல விஷயங்களை குறிப்பிட்டிருக்கிறார். தான் வந்து என்ன காரணத்துக்காக தவெகவில் சேர்ந்தோம், தெரியாமல் சேர்ந்துவிட்டேன் என்பது பற்றி கொஞ்சம் மோசமாக குறிப்பிட்டிருக்கின்றார். இது வெளியே வந்தவுடன், 'நான்தான் இதை பண்ணேன்' என்று யாரும் சொல்ல மாட்டாங்க. எந்த வேட்பாளரும், 'நான்தான் இதை வாக்குமூலமாக சொன்னேன். நான் சொன்னது உண்மைதான். தெரியாமல் சொல்லிவிட்டேன்' என்று சொல்ல மாட்டார்கள். இது சித்தரிக்கப்பட்டது என்றுதான் சொல்வார். அது தவறான, பொய்யான ஒரு வாதம்.

எடப்பாடி பணம் தர மாட்டாரு. ஒரு பைசா கூட தரல. கடந்த தேர்தலில் ரூ.31 கோடி செலவு பண்ணேன்" என்று சொல்லியிருக்காரு. இதே ஒரு குற்றச்சாட்டு, மிகப்பெரிய குற்றம். இதில் அவருக்கு இந்த தேர்தலில் நிற்க முடியாது. அதை முறையாக அன்றைக்கு ஆய்வு செய்திருப்பார் என்று சொன்னால், அவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

அவர் ராஜினாமா பண்ண வேண்டிய தேவை கூட இருந்திருக்காது. நாங்கள் கொடுத்த புகார் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கத் தவறும் என்று சொன்னால், சட்டப்படி என்ன நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமோ, அதை திமுக மேற்கொள்ளும். தமிழக வாக்காளர்கள் மத்தியில் ஏற்கனவே மாற்றம் வந்துவிட்டது. நடக்க கூடிய தேர்தலில் இரண்டு தொகுதியிலும் தி.மு.க. உறுதியான வெற்றியை பெறப்போகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.